Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

மலர் - 24 இதழ் - 5 மே 2011

தனிப் பிரதி ரூ. 8/-

## பதினான்காம் வேனிற்கால வேதாகம முகாம்

## மே 2 - 4, 2011 ஏலகிரிமலை




முகாமில் காலை தியான வகுப்பின் போது...



முகாமில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி...

முகாமில் பகல்நேர வகுப்பின் போது திரண்டிருந்தவர்கள்...




## ஆசானின் போதனையில்...


1. வேதாகம முகாம் பற்றிய துளிகள்.......................... 1

2. ஆசிரியர் உரை ............................................... 2

3. ஏன் மனந்திரும்புதல் மிகவும் அவசியமானது? ..... 10

4. பெண்கள் பகுதி ............................................... 16

5. வாலிபர் பகுதி ................................................... 21

6. சிறுவர் பகுதி ..................................................... 24

7. துருவின் சாட்சி .................................................. 26

8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......................... 29



**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்**

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் 638 701

✆ : 98427 30382, 9965530385



**திருமறை தியானம்**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் TV | ஞாயிறு | காலை | 6:45 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட

**சத்தியத்தின் குரல்**

என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 MAY - 2011 Issue - 5


## பதினான்காம் வேனிற்கால வேதாகம முகாம் பற்றிய துளிகள்

**மே 2-4-2011 ஏலகிரி மலை**

| | | |
|---|---|---|
| கலந்து கொண்ட மாநிலங்கள் | – | 4 |
| கலந்து கொண்ட பிராந்திய சபைகள் | – | 52 |
| கலந்து கொண்ட பட்டணங்கள் | – | 50 |
| கலந்து கொண்ட நபர்கள் | – | 525 |
| கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தோர் | – | 14 |
| கீழ்ப்படிதலால் பயனடைந்த சபைகள் | – | 10 |

இம்முகாமின் வெற்றிக்காக ஊக்கமாய் ஜெபித்த, உற்சாகமாய் கொடுத்து உதவிய உங்கள் ஒவ்வொருவருக்கும், தேவனுடைய வார்த்தைகளை வல்லமையாய் எடுத்து விளம்பிய **தேவதாசர்கள்** யாவருக்கும், விசுவாசிகளை திரளாக அழைத்து வந்த கனத்திற்குரிய **ஊழிய சகோதரர்கள்** அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஆசிரியர்

ஆசிரியர் உரை

# என்னத்தைச் செலுத்துவேன்?

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில், ஒரே பொருளைத் தரும் வித்தியாசமான வார்த்தைகளைப் பயன் படுத்துகிறவர்களாகவே உள்ளோம். ஆயினும், அப்படிப்பட்ட வார்த்தைகளை, ஒருவேளை அது ஒரே பொருளைக் கொடுக்கக் கூடியவைளாக இருந்தாலும், அவைகளை எல்லா இடங்களிலும் ஏகமாகப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அப்படிப் பயன் படுத்துவது சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவோ அல்லது பொருள் பொதிந்ததாகவோ இருக்காது. உதாரணமாக, “நீர்” “உமது” மற்றும் “நீங்கள்” “உங்களுடைய” போன்ற வார்த்தைகள் ஒரே பொருளைத் தருபவைகளாக இருந்தாலும், முதல் இரண்டு வார்த்தைகளை நம்மைப் படைத்த தேவனுக்கும், அடுத்த இரண்டு வார்த்தைகளை நம்மைப் போன்ற சக மனிதர்களுக்குமே பயன்படுத்துகிறோம். இப்படி வார்த்தைகளை வகைப்படுத்தி பயன்படுத்துவதை மொழி அறிவு சம்பந்தப்பட்ட ஒன்றாக நாம் கருதாமல், படைத்தவருக்குக் காட்டும் மரியாதையாகவும், அவரிடம் நாம் கொண்டுள்ள பக்திக்கு அடையாளமாகவுமே எண்ணுகிறோம்.

நமது தலைப்பில் இடம்பெற்றுள்ள “செலுத்துவேன்” என்ற வார்த்தையைக் கூட நாம் இந்த அடிப்படையில்தான் பார்க்க வேண்டும். அதாவது, இச்சங்கீதக்காரனால், தேவனுக்காக விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென்றே பார்க்க வேண்டும். ஆம், 116-ம் சங்கீதத்தின் ஆசிரியர், தேவனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல எண்ணினபோது, “என்னத்தைக் கொடுப்பேன்” என்று வழக்கமான வார்த்தைகளைக் கொண்டு சாதாரணமாகச் சொல்லா மல், மரியாதையும், பயபக்தியும் கலந்த அளவில், என்னத்தைச் செலுத்துவேன் என்றே கூறியுள்ளான். அவன் தேவனுக்காக பயன்படுத்திய வார்த்தைகள், அவன் யார் என்பதையும், எப்படிப்பட்ட தன்மை கொண்டவள் என்பதையும் நமக்குக் காட்டுகிறது.

இப்பொழுது, நமது வழக்கத்தின்படியாக, நமது தலைப்புக் கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து, பிறகு தொடரு வோம்.

150 பாடல்களைக் கொண்ட சங்கீதப் புத்தகம் அனைத்தும் தாவீது அரசனாலே பாடப்பட்டது என்று பெரும்பாலோர் பொதுவாக எண்ணினாலும், உண்மையில் அவை ஏழு ஆசிரியர் களைக் கொண்டே பாடப்பட்டுள்ளது. அவர்கள் தாவீது, ஆசாப், கோராகின் புத்திரர், சாலமோன், மோசே மற்றும் எஸ்ராயர் களாகிய ஏமான், ஏத்தான் என்பவர்கள், இந்த உண்மை தெரியா மல், சங்கீதம் என்றாலே நாம் தாவீது என்று சொல்லிக் கொண்டி ருக்கக்கூடாது. ஆயினும் கிட்டத்தட்ட பாதி சங்கீதங்களுக்கு (73) தாவீது தான் ஆசிரியர். நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116-ம் சங்கீததத்திற்கான ஆசிரியர் யார் என்று திட்டமாகத் தெரியாவிட்டாலும், தாவீதாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏறக்குறைய ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னும், 150 பாடல்களைக் கொண்ட சங்கீத புத்தகத்தை நாம் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. போதனை சங்கீதம், 2. துதி சங்கீதம், 3. நன்றி சங்கீதம், 4. புலம்பல் சங்கீதம், 5. நம்பிக்கை சங்கீதம், 6. மேசியாவைப் பற்றிய சங்கீதம் 7. ஐயோ சங்கீதம் என்று. இவற்றில் நமது தலைப்பு இடம் பெற்றி ருக்கும் 116ம் சங்கீதம், நன்றி சங்கீதத்தின் கீழ் வரக்கூடிய ஒன்று. இச்சங்கீதத்தையும், வேறு சில குறிப்பிட்ட சங்கீதங்களையும், யூதர்கள் தங்களுடைய முக்கியமான பண்டிகை காலங்களிலே பாடியுள்ளதாக பிறவரலாறும், வேதாகமும் கூறுகிறது. நம்முடைய இரட்சகர் வாழ்ந்த காலத்தில் கூட இச்சங்கீதம் பாடப்பட்டதாக நம்பப்படு கிறது. குறிப்பாக, கர்த்தரின் பந்தி ஆரம்பிக்கப்பட்ட போது, ஆண்டவர் இயேசுவாலும், அவருடைய சீடர்களாலும் பாடப்பட்ட பாடல், இவைகளுள் ஒன்று என்று தான் நம்பப்படு கிறது. (மத். 26:30).

இந்த 116-ம் சங்கீதத்தின் மொழிநடையையும், குறிப்பாக கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத் தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன் என்ற வசனங்களடங்கிய பகுதியையும், அதிலுள்ள வார்த்தைகளையும், அவைகளுக்கான அர்த்தங்க ளையும் நாம் கவனித்தால், இதன் ஆசிரியர் ஒரு மிகப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதினிமித்தம் தேவாதி தேவ னுக்கு நன்றி சொல்லிப் பாடியுள்ளார் என்று தெரிந்து கொள்ள லாம். இப்படி, ஆபத்திலிருந்து தன்னை விடுவித்த தேவனுக்கு, எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியாமல் தடுமாறி, தனக்குத் தானே, தன் இருதயத்தோடு பேசியுள்ளான் என்பதையும் காண முடியும்.

சரி, இப்பொழுது, சிறப்புமிக்க இச்சங்கீதத்தின் இவ்வசனங்களிலிருந்து, நமக்கு என்னென்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்த்துப் பயனடைவோம்.

## I கர்த்தர் நன்மைகளைச் செய்பவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (வ – 12)

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உபகாரங்களைச் செய்கிறவராயிருக்கிறார் என்பது.

இச்சங்கீதக்காரன், வசனம் 12-ல், கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் என்று சொல்வதின் மூலம் தன் வாழ்வில் பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகளுக்கும் காரணம் தேவாதி தேவன் தான் என்பதை முற்றும் முடிய ஒத்துக் கொள்கிறான். இதே கருத்தை புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியரும் கூறியுள்ளார். "*நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை*" என்று (யாக். 1:17) ஆனால், இவ்வழகிய கருத்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இச்சங்கீதக்காரனுக்குப் புரிந்துள்ளது.

ஆனால், ஆவியானவரின் துணை கொண்டு இச்சங்கீதக்காரனால் முன்மொழியப்பட்டு, அதே ஆவியானவரால் யாக்கோபு ஆசிரியரால் வழிமொழியப்பட்டிருக்கும் இவ்வேதாகம உண்மையை நம்மில் எத்தனை பேர் அப்படியே ஏற்றுச் செயல்படுகிறவர்களாக உள்ளோம்? சொல்லுங்கள் பார்க்கலாம்! என்னுடைய வாழ்க்கையில் நான் பெற்று அனுபவிக்கிற நன்மைகள் அனைத்தும் எனக்குக் கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நம்மில் எத்தனை பேர் நினைக்கிறோம்.?

என் உழைப்பின் பலனாக இந்த உயர்வு வந்தது என்றும், என்னுடைய முயற்சியின் விளைவாக அந்த நன்மை கிடைத்தது என்றும், என்னுடைய செல்வாக்கின் காரணமாக அக்காரியம் கைகூடிற்று என்று தானே சொல்லுகிறோம். இன்னும், என்னுடைய அதிர்ஷ்டத்தினால் இந்த யோகம் அடித்தது என்று தானே பீற்றுகிறோம். அப்படித்தானே! ஆமாம்தானே! ஆனால், இச்சங்கீதக்காரனோ, கர்த்தர் எனக்குச் செய்த எல்லா *உபகாரங்கள்* என்று கூறுகிறார். ஆம், ஒருவேளை அவை பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், கர்த்தர் தனக்குச் செய்ததாகவே எண்ணியுள்ளான். பக்தன் யோபு கூறுவது போல், "கர்த்தர் கொடுத்தார்" (யோபு 1:21) என்றல்லவா எண்ணியிருக்கிறான். நம்மில்

எத்தனை பேர் தேவனிடத்தில் நாம் பெற்று அனுபவிக்கிற நன்மைகளுக்காக இப்படிச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள்.

அன்பானவர்களே, நம் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக எண்ணிப்பாருங்கள். நாம் வாழ்வதற்குத் தேவையான பல காரியங்கள் இலவசமாகவும், சொற்ப முயற்சியாலும் கிடைப்பதால், கர்த்தர் நமக்குச் செய்யும் மேன்மைகளை நாம் யாரும் அவ்வளவாக உணருவதில்லை. உதாரணமாக, நாம் சுவாசிக்கும் காற்று, நாம் வாழ்வதற்குத் தேவையான சூரிய ஒளி, நாம் குடிப்பதற்குத் தேவையான தண்ணீரை தரும் மழை போன்ற இவைகளுக்காக நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு பணம் மாதந்தோறும் செலவிடுகிறோம்? இன்னும், தேவன் நமக்குக் கொடுக்கும் பெலனைக் கொண்டு உழைத்துப் பெற்றுக்கொள்ளும் உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளுக்காக நாம் தேவனுக்கு என்ன கைம்மாறு செய்கிறோம்? தேவன் நம்முடைய வாழ்வில் செய்யும் நன்மைகளுக்கு நாம் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். பத்து குஷ்டரோகிகளை குணமாக்கின இயேசு, ஒருவன் மாத்திரம் திரும்பி வந்த போது, மற்ற ஒன்பது பேர் எங்கே என்று கேட்டது உங்களுக்கு மறந்து போய் விட்டதா? (லூக். 17:17)

இங்கே, தேவன் மனிதனுக்குச் செய்திருக்கும் நன்மைகளில் மிகப்பெரிய நன்மையை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. யோவான் 3:16-ம் வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவன் அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". ஒருவேளை, அவர் நம் வாழ்வில் செய்த மற்ற நன்மைகளை நாம் மறக்கிறவர்களாக இருந்தாலும், தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குத் தந்த நன்மையை யாராவது மறக்கலாமா? நிச்சயமாக மறக்கக்கூடாது. குமாரனாகிய இயேசுவுக்கும், அவரை அனுப்பின தேவனுக்கும் நாம் என்றென்றும் நன்றி யுடையவர்களாகவும், உண்மையுடையவர்களாகவும் இருப்பது இப்பூமியில் பிறந்து வாழும் ஒவ்வொருவரின் கடமை. இதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது.

## II. அவருக்கு எதையாவது செலுத்தவேண்டும் (வ-12)

சங்கீதம் 116:12-13 வசனங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்காக நாம் எதையாகிலும் செலுத்த வேண்டுமென்பது.

சர்வவல்ல தேவனிடத்திலிருந்து பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட இச்சங்கீதக்காரன், நம்மில் அநேகரைப் போல் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு போகிற போக்கில் ஒரு "நன்றி" சொன்னால் போதுமென்று எண்ணாமல், பெற்றுக் கொண்டவை களுக்கு ஈடாக "அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?" என்று எண்ணி மலைத்துள்ளான்!.

என்னத்தைச் செலுத்துவேன் என்று இவன் மலைத்து நின்று சொன்னது, இவன் நிலை பற்றி நமக்கு இரண்டு காரியங்களைச் சொல்லுகிறது. முதலாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஈடாகச் செலுத்துவதற்கு என்னிடத்தில் ஒன்றுமே இல்லையே என்று குமுறுவது. இரண்டாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக் குப் பதிலாக என்னிடத்தில் இருப்பதில் எதைச் செலுத்தினால் கொஞ்சமாகிலும் கிட்ட நெருங்கும் என்று எண்ணித் தவிப்பது.

தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்பவைகளுக்கு ஈடாக, நாம் எதையும் ஒருபோதும் செய்துவிட முடியாது என்பது உண்மையே. ஆனாலும், நான் பெற்று அனுபவிப்பவைகளுக் காக, எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடைய வர்களாக இருப்பது மிகமிக அவசியம்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பாருங்கள். தன்னுடைய பழைய வாழ்க்கை பற்றிக் கூறும் போது, "முன்னே நான் தூஷிக்கி றவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்" என்று கூறுகி றான் (1 தீமோ. 1:13) அப்படிப்பட்ட பவுலை, கிறிஸ்து, அவன் தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்துப் பிடித்தார் (அப். 9:3-6). அவன் அனனியாவால் உபதேசிக்கப்பட்டு, பாவங்கள் கழுவப் பட ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப். 22:16). பிறகு, இந்தப் பவுல், பிலிப்பிபட்டணத்து சபையாருக்கு நிருபம் எழுதும்போது, "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படியாக ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னான வைகளை நாடுகிறேன் ...." (பிலி. 3:12,13) என்று கூறுகிறான். ஆம், தன்னைச் சந்தித்த இயேசுவுக்காக, தன் பாவங்களுக்காக இரத்தம் சிந்தின இயேசுவுக்காக, தான் இரட்சிக்கப்பட நற்செய்தி யை நல்கிய இயேசுவுக்காக, எந்தளவு நன்றியுடைவனாயிருந்து தன் வாழ்க்கையை அர்ப்பணிந்துள்ளான் என்று பாருங்கள். இன்னும், கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். (பிலி. 1:21) என்று சொல்லும் அளவுக்கு தன் நன்றியை கிரியைகளி னால் காட்டியுள்ளான் என்பதையும் கவனிக்கத் தவறி விடாதீர்கள்.

அருமையானவர்களே, நாம் பார்க்கும் இந்த பழைய ஏற்பாட்டு சங்கீதக்காரன் போலவும், நம்முடைய புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் பவுல் போலவும் நாம் தேவனுக்காக, கிறிஸ்துவுக்காக, அவர்களிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளுக்காக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருக்கிறோமா? ஒருவேளை இதுகாறும் அப்படிப்பட்ட எண்ணமில்லாதவர்களாக இருந்திருப்போமானால், சரி, போகட்டும், இனிமேலாகிலும், தேவனுக்குச் செலுத்த வேணடியவைகளை செலுத்துகிறவர்களாக இருப்போம். நம்முடைய இரட்சகர், “இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்” என்று நமக்குச் சொல்லியுள்ளதை நாம் கண்டிப்பாக மறக்கக்கூடாது (மத். 22:21)

## III இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும் (வ-13)

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு முக்கியமான பாடம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது.

கர்த்தர் செய்த உபகாரங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணி, அதற்கு நன்றியாக எதைச் செலுத்தினால் சரியாக இருக்குமென்று மூளையை கசக்கி பிழிந்து, எதையும் முடிவெடுக்க முடியாத நிலையில் எப்படியோ ஒரு தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தான் நம் சங்கீதக்காரன். அந்த அரிய தீர்மானம் தான், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்வேன் என்பது. ஆஹா! எப்படிப்பட்ட ஒரு தீர்மானம்! வேறு என்ன தீர்மானம் எடுத்திருந்தாலும் இதற்கு ஈடாகுமா அல்லது இணைதான் ஆகுமா? முடியவே முடியாது. சங்கீதக்காரனே, சபாஷ்! சரி இவன், மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவனாதலால், இரட்சிப்பின் பாத்திரம் என்பது, அன்றைய கால கட்டத்தில், பிரமாணங்களினடிப்படையில் தேவன் கட்டளையிட்டிருக்கும் அல்லது எதிர்பார்க்கும் மார்க்க கடமைகளைச் செய்ய தன்னை ஒப்புக்கொடுப்பதுதான். ஆம், இச்சங்கீதக்காரன், பொன்னைக் கொடுக்கலாமா, பொருளைக் கொடுக்கலாமா, இதை கொடுக்கலாமா, அதை கொடுக்கலாமா என்று குழம்பிப்போய், இறுதியில் தனக்கிருக்கும் ஒரே வழி இரட்சிப்பின் பாத்திரம் என்று கண்டுகொண்டான்.

தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இந்தப் பழைய ஏற்பாட்டுப் பக்தன், இரட்சிப்பின் பாத்திரம் எடுப்பேன் என்று தீர்மானித்து வாழ்ந்திருக்கும் போது, புதிய ஏற்பாட்டின் கீழாக வாழ்ந்து, அவனைக்காட்டிலும் மிக அதிகமான ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று அனுபவிக்கும் சிலாக்கியம் உள்ள நாம்,

இரட்சிப்பின் பாத்திரம் எடுத்தர்வகளாக நம்முடைய வாழ்க்கை யை நடத்துவது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப் பாருங்கள். இச்சங்கீதத்தின் ஆசிரியர், தாவீது என்று நம்பப்படுவதாலும், அவன் ஒரு அரசனாக இருந்தானென்பது உண்மையாக இருப்ப தாலும், அவனுக்கு முன்பாக வேறு பல பாத்திரங்களும் நிச்சய மாக இருந்திருக்கும். அதாவது, உலக இன்பம் என்ற பாத்திரம், உல்லாச வாழ்க்கை என்ற பாத்திரம், நாடு பிடிக்கும் ஆசை என்ற பாத்திரம், சர்வாதிகாரம் என்ற பாத்திரம் என்று பல பாத்திரங்கள் இருந்திருக்கும். ஆனால், இவனோ, பெத்தானியா கிராமத்து மரியாள் போல, தேவையானது ஒன்றே என்று தீர்மானித்து, (லூக். 10:42) இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக் கொண்டான்.

அருமையானவர்களே, நம்மில் எத்தனைபேர் இந்த இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து வாழத் தயாராக இருக்கிறோம்? இந்த இரட்சிப்பின் பாத்திரம் நாம் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டுமென்பது தேவசித்தமாக இருக்கிறது. (1 தீமோத். 2:4) மேலும், எபிரெயர் ஆசிரியர், இந்த இரட்சிப்பின் பாத்திரத்தை நாம் எடுக்காவிட்டால் தண்டனைக்குத் தப்பமுடியாது என்று நம்மைக் கடுமையாக எச்சரிக்கிறார். “ஏனெனில், தேவ தூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக் கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரி டத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடை யாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப் பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம். (எபி. 2:2-4) என்று.

எப்படி இந்த சங்கீதக்காரனை, கடுமையான சரீரச் சூழ்நிலையி லிருந்து தேவன் விடுவித்தாரோ, அதுபோலவே, நம் ஒவ்வொரு வரையும் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவிக் கப்படும்படியான சகல காரியங்களையும் நமக்கு கூட்டி வழங்கி யுள்ளார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய தேவத் துவத்துள் உள்ள மூவரும், நாம் இரட்சிக்கப்படும்படி தங்கள் பங்கை செய்துள்ளனர். ஆம், பிதாவாகிய தேவன் தமது ஒரே பேரான குமாரனை நமக்காகத் தந்துள்ளார் (யோவா. 3:16) குமாரனாகிய கிறிஸ்து தன்னுடைய உயிரையே நமக்குக் தந்துள்ளார் (எபே 5:2) பரிசுத்த ஆவியானவர் வேத வசனங் களை நமக்குக் கொடுத்துள்ளார் (யோவா 14:26, 16:13) அப்படியானால், இதற்குக் கைம்மாறாக, நாம் இரட்சிப்பின்

பாத்திரம் எடுக்க வேண்டியது அவசியமா?, இல்லையா? நீங்களே சொல்லுங்கள். சரீர நன்மைகளைப் பெற்ற சங்கீதக்காரனுக்கே அது அவசியமானால், சரீர நன்மைகளையும், ஆவிக்குரிய நன்மைகளையும் ஒருங்கே பெற்ற நமக்கு அது எவ்வளவு அவசியம் என்று தயை கூர்ந்து சிந்தித்துப்பாருங்கள்.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே, ஒருவேளை, உங்களில் யாராவது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இரட்சிப்பின் பாத்திரம் எடுக்காதவர்களாக இருந்தால், உடனடியாக நீங்கள் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். "இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் என்றே, தேவன் பவுலடியாரைக் கொண்டு சொல்லியுள்ளார்" (II கொரி. 6:2). ஆகவே, நாம் காலம் தாழ்த்தக்கூடாது, அப்படித் தாழ்த்துவது தேவ ஆலோசனைக்கு விரோதமானது.

ஒருவேளை, இரட்சிப்பின் பாத்திரத்தை நான் ஏற்கனவே எடுத்துவிட்டேன் என்று நீங்கள் சொல்கிறவர்களாக இருந்தால், உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறேன். நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரம், இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களின்படி சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நம்முடைய இறுதி நியாயத்தீர்ப்பு வசனத்தினடிப்படையில் தான் இருக்கப் போகிறது. இயேசு ஆண்டவர் "....நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று தான் கூறியுள்ளார். ஆகையால், நம்முடைய இரட்சிப்பு (யோவா. 12:48) விசுவாசித்துப் பெற்றதாக (மாற். 16:16) பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பிப் பெற்றதாக (அப். 2:38), இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டுப் பெற்றதாக (அப். 8:37), பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கிப் பெற்றதாக (அப். 22:16) இருக்க வேண்டும். இதற்கு மாறான எந்தவொரு உபதேசமும், எப்படிப்பட்ட அனுபவமும் புதிய ஏற்பாட்டு உபதேசப்படியான இரட்சிப்பாக இருக்கமுடியாது.

அன்பானவர்களே, தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டவைகளுக்குப் பதிலாக ஒன்றைச் செலுத்துவதற்கு இரட்சிப்பைக் காட்டிலும் சிறந்தது வேறெதுவுமில்லை. ஆகையால், இன்றே இந்த இரட்சிப்பின் அனுபவத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள உங்களை மன்றாடிக் கேட்கிறேன். இரட்சிப்படைந்து, கர்த்தரால், அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு, (அப். 2:47) நித்திய வாழ்விற்க்கான உத்திரவாதம் பெறுங்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

EZS. ராஜநாயகம்

# ஏன் மனந்திரும்புதல் மிகவும் அவசியமானது?

**J.C. சோட்**

மனந்திரும்புதல் ஒரு வேதாகம பாடம். இதன் பொருள், மனதை மாற்றுவது. அதாவது ஜீவிய மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு நடைமுறை. அதே நேரத்தில்,மனந்திரும்புதல் என்பது செய்யப்பட்ட தவறுக்கு வருந்துவதென்பதை விட ஒருபடி மேலான செயல். மனந்திரும்புதலில் செய்த செயலுக்கு துக்கப்படுவது ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டிருந்தாலும், ஒருவர் தான் பிடிபட்டதினால் செய்த பாவத்திற்காக வருத்தப்பட வாய்ப்புண்டு. ஆகையால், வெறுமனே துக்கப்படுதல் போதாது. மாறாக, ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் தவறான மற்றும் கெட்ட காரியங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு அவைகளை விட்டு விடுவதும் அவசியம். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகச் சொன்னார். “தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது” (II கொரிந்தியர் 7:10).

கர்த்தர் மனந்திரும்புதல் என்கின்ற பதத்திற்கான விளக்கத்தை இரண்டு குமாரர்களை உடைய ஒரு மனிதனுடைய உவமையில் சொல்லியிருக்கிறார். “ஆயினும், உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து; மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சை தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன் மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்தில் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன் போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள் மூத்தவன் தான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; “ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும், வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்” (மத்தேயு 21:28-32). இங்கே, இயேசு பிரதான ஆசாரியர்களிடமும் அவருடைய நாட்களிலிருந்த மூப்பர்களிடமும் இவைகளைச் சொன்னார். இவர்கள் மத சம்மந்தமான மக்கள். ஆயினும், பக்தி காரியங்களில் தவறைச் செய்தார்கள். எனவே, இயேசு அவர்கள் மனந்

திரும்பும்படி சொன்னார். அதன் பின்பு, மனந்திரும்புதல் என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் விளக்கினார். இங்கே இயேசு மனந்திரும்புகிற நபரைப் பற்றிச் சொல்லும் போது, தகப்பனிடம் முதலில் மாட்டேன் என்று சொல்லி விட்டு பின்பு தன் மனதை மாற்றிப் போக தீர்மானித்தவன் தான் என்று சொல்கிறார். வேறொரு குமாரன் போய் தன் தகப்பனுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை பார்ப்பேன் என்று சொல்லியும் பின்பு போகவில்லை. கிறிஸ்து யாரிடம் இந்த உவமையைச் சொன்னாரோ அவர்களைப்பார்த்து, இவர்களுள் எந்த குமாரன் தன் தகப்பனுடைய சித்தத்தைச் செய்தான் என்று கேட்டார். அவர்கள் முதலில் போகமாட்டேன் என்று சொல்லி பின்பு போகத் தெரிந்து கொண்ட மூத்தவன் தான் என்று பதிலளித்தார்கள். கர்த்தர், ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று அந்நாட்களில் வாழ்ந்த மத சம்மந்தமான மக்களிடம் சொன்னார். ஏனென்றால், ஆயக்காரரும், வேசிகளும் மனந்திரும்புவார்கள். ஆனால், ஆசாரியர்களும், மூப்பர்களும் மனந்திரும்பமாட்டார்கள்.

மனந்திரும்புதல் ஏன் மிகவும் அவசியமானது? ஏனென்றால், இந்த உலகமானது பாவம், அநீதி, தேவபக்தியின்மை, ஒழுக்கக்கேடு, மாம்சத்தின் கிரியைகள் போன்றவைகளினால் நிறைந்திருக்கிறது. பாவம், மனதில் இருந்தாலும், பேச்சில் இருந்தாலும், ஒருவருடைய ஜீவியத்தில் இருந்தாலும் அது அழிவை ஏற்படுத்தும். பவுல் இப்படிச் சொன்னார். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23). மறுபடியும், பவுல் இப்படிச் சொல்கிறார். "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" (கலாத்தியர் 6:7,8).

பாவம் அழிவை உண்டாக்கக்கூடிய ஒன்றாக இந்த உலகத்தில் இருந்தால், யார் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்? எதுசரி, எது தவறு என அறிந்து கொள்ளும் திறன் உடைய யாவரும் பாவம் செய்திருக்கிறபடியால், கணக்கொப்புவிக்க வேண்டிய யாவரும் மனந்திரும்ப வேண்டும் (ரோமர் 3:23). அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறியிருக்கிறார்கள் அல்லது தேவனுடைய சித்தத்தை அசட்டை பண்ணியிருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் உலகம் அக்கிரமத்தினால் நிறைந்து காணப்பட்ட போது, மனுஷனை உண்டாக்கினதற்காக தேவன் மனஸ்தாபப்பட்டார். மனிதன் மிகவும் துன்மார்க்கமாக

நடந்தபடியால் அவனை உண்டாக்கினதற்காக தேவன் வருத்தப் பட்டார். அதன் பின்பு தேவன், நீதியுள்ள மனுஷனாகிய நோவா விட ஜனங்கள் மனந்திரும்பும்படி பிரசங்கிக்கவும் அப்படி அவர் கள் மனந்திரும்பாவிட்டால் ஜலப்பிரளயத்தில் அழிந்து போவீர் கள் என்று எச்சரிக்கவும் அனுப்பினார். அவர்கள் அதைக் கேட்டுத் தங்கள் துன்மார்க்கத்திலிருந்து திரும்பியிருந்தால் அவர்கள் தப்புவிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், அதற்கு செவி கொடா மல் போனபடியால், நோவா, அவருடைய மனைவி, அவர்களு டைய மூன்று குமாரர்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் தவிர மற்ற எல்லாரும் ஜலப்பிரளயத்தில் அழிந்து போனார்கள் (ஆதியாகமம் 6-8).

யோனாவின் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கலாம். "அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு கர்த்தருடைய வார்த் தை உண்டாகி அவர்; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிர மம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப் போகும்படி எழுந்து யோப்பாவுக்குப்போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தரு டைய சமூகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்" (யோனா 1:1-3). அப்போது கடலில் பெருங்காற்று உண்டானது. கப்பற்காரர் யோனா தான் இந்நிலைக் குப் பொறுப்பாளி என தீர்மானித்து உடனடியாக அவனை தூக்கி கடலில் போட்டார்கள் என்று தொடர்ந்து வேத வசனம் சொல் கிறது. அதன்பின்பு யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற் றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. தொடர்ந்து வேத வசனங்களில் நாம் இப்படியாக வாசிக்க முடியும். "இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர்; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய்; நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி" என்றார். "யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகாபெரிய நகரமா யிருந்தது. யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒரு நாள் பிரயாணம் பண்ணி; இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது, நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவே யிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து உபவாசம் பண்ணும் படி கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டு டுத்திக் கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்

கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும், ராஜா, தானும், தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக, நினிவே யிலெங்கும் மனுஷரும், மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும், மிருகங்களும் இரட்டினால் மூடிக் கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தன்னுடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர் களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (யோனா 3 ஆம் அதிகாரம்). இங்கே, யோனா கர்த்தரை விட்டு ஓடிப்போவதிலி ருந்தும், தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பைத் தட்டிக் கழிப்பதி லிருந்தும் மனந்திரும்பியதைக் காணலாம். தேவகட்டளைப்படி துன்மார்க்கமான மகா பெரிய நகரமாகிய நினிவேக்குச் சென்று பிரசங்கித்தபோது அந்த பட்டணத்தார் மனந்திரும்பி, தங்கள் பாவத்தை விட்டுத் திரும்பினார்கள். கடைசியாக, தேவன் நினிவே பட்டணத்தை அழிக்கலாமென்ற தன் மனதை மாற்றி, அந்தப் பட்டணத்தார் மனந்திரும்ப முன்வந்தபடியால் அவர் களைத் தப்புவித்தார். தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்பட்ட போது அது மனந்திரும்புதலை உண்டாக்கினது. இது சம்மந்தப் பட்டவர்களை தேவன் தப்புவிக்க வழிவகுத்தது. ஆனால், அங்கே மனந்திரும்புதல் ஏற்படாமல் இருந்திருந்தால் அவைகள் எல்லாம் அழிந்து போயிருக்கும்.

பழைய ஏற்பாடு காலம் முழுவதும் தேவன் இஸ்ரவேலர் களிடம் துன்மார்க்கத்திலிருந்து திரும்பும்படி மறுபடியும் மறுபடி யும் கேட்டுக் கொண்டார். அவர்கள் அப்படிச் செய்தால் தான் அவர்களுக்கு தான் தேவனாயிருப்பதாகச் சொன்னார். மேலும், அவர்களுக்காக யுத்தம் செய்வதாகவும், அவர்களை ஆசீர்வதிப் பதாகவும் சொன்னார். ஆனால், இஸ்ரவேல் தொடர்ந்து தவறான பாதையில் சென்றும், தங்களைச் சுற்றிலும் இருந்த தெய்வங்களை ஏற்றுக் கொண்டும், துன்மார்க்கமான பாதையில் சென்று கொண் டும் இருந்தது. அதன் விளைவாக, தேவன் அவர்களை தண்டித்து, சத்துருக்கள் வந்து இவர்களைச் சிறைபிடித்துச் செல்லும்படி அனுமதித்தார். இவைகளெல்லாம் மனந்திரும்ப தவறியதின் நேரடி விளைவுகளாயிருந்தது. ஞானி இப்படிச் சொன்னார். "நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" (நீதிமொழிகள் 14:34).

மத்தேயு 3:1-3 வசனங்களில், யோவான் ஸ்நானகன், மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்ததை நாம் வாசிக்கிறோம். கிறிஸ்து தன்னுடைய நாட்களில் வாழ்ந்த ஜனங்களிடத்தில் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்று எச்சரித்தார் (லூக்கா 13:3). பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்தில் திரளான மக்களிடத்தில் பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கம் பண்ணினார்கள். அந்தக் கூட்டத்தில் கிறிஸ்துவை சிலுவையிலறைந்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் தாங்கள் கேட்ட காரியங்களைக் குறித்து தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டார்கள்; அதாவது, அவர்கள் விசுவாசிகளாகி, என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினார்கள். "பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றார் (அப். 2:38). இதன் பொருள், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால், தங்கள் பாவங்களிலிருந்து திரும்ப வேண்டும் அல்லது பாவங்களை விட்டுவிட வேண்டும் என்பது. மேலும், மனந்திரும்புதல், மன்னிப்பதற்கான நிபந்தனைகளுள் ஒன்றாக இருக்கிறது என்கிற பொருளையும் கொடுக்கிறது. ஒருவேளை அவர்கள் மனந்திரும்ப விருப்பமில்லாதிருந்தால் கிறிஸ்துவை விசுவாசிக்க விருப்பமுடையவர்களாயிருந்தாலும், ஞானஸ் நானம் பெற விரும்பியிருந்தாலும் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. வெறுமனே மனந்திரும்புதல் மாத்திரம் அவர்களை இரட்சித்திருக்காது. இரட்சிக்கப்பட அவர்கள் தேவனுடைய சத்தியத்தைக் கேட்க வேண்டியதாயிருந்தது, கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியதாயிருந்தது, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டியதாயிருந்தது, பாவ மன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெறவும் வேண்டியதாயிருந்தது (அப். 2:37,38; அப். 8:36-39).

அப்போஸ்தலர். 17:30 ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம், "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்". இங்கே, இவர் சொல்கிறது என்னவென்றால், ஒரு கால கட்டத்தில் தேவன் சில குறிப்பிட்ட காரியங்களைக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கலாம் அல்லது சில காரியங்களை சகித்திருக்கலாம், ஆனால், இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்". பின்பு 17:31ல் லூக்கா சொல்லும் போது, "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை

எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்". எனவே, அவரைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டுமென்றால், நாம் மனந்திரும்பி கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிற யாவையும் செய்தால் இந்த உலகத்திலும், இனி வரும் உலகத்திலும் இரட்சிக்கப்படுவோம்.

வழிவிலகிச் செல்கிற அல்லது பாவம் செய்கிற கிறிஸ்தவனின் நிலை என்ன? பாவமானது அவனிடமிருந்து கர்த்தருடைய முகத்தை மறைத்து விட்டது (I பேதுரு 3:12). பாவத்தில் மீண்டும் விழுந்து விட்ட ஒரு கிறிஸ்தவனின் பாவம் நீக்கப்பட வேண்டும், அல்லது மன்னிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கான ஒரே வழி அப்படிப்பாவம் செய்தவன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பிதாவினிடத்தில் மன்னிப்பு கேட்பதுதான். (அப். 8:14,25; யாக்கோபு 5:16).

இப்போது உங்களைப் பற்றி எப்படி? உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி விட்டீர்களா? இது உங்கள் நன்மைக்கானது என்பதை உணருங்கள். கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்று, தேவனுக்குக் கீழ்ப்படியும் போது உங்களால் நல்ல தேவ பக்தியுள்ள வாழ்க்கையை நடத்த முடியும், அப்போது நீங்கள் மாற்றமடைந்த நபராக இருப்பீர்கள். இவைகளையெல்லாம் செய்து முடிக்கும் போது உங்களைச் சுற்றியிருக்கிறவைகள் நன்மைக்காக மாறத்தொடங்கும். இப்பொழுது சொல்லப்பட்டவைகளின்படி காரியங்கள் நடக்கிறதா என்று முயற்சி செய்து பாருங்கள்.

## நாளும் நடப்பும்

1. தமிழக சட்டசபை தேர்தலில் அ.இ.அ.தி.மு.க வெற்றி.
2. ஜெயலலிதா 3வது முறையாக முதல்வர் ஆகிறார்.
3. சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் அமெரிக்க ராணுவத்தால் சுட்டுக்கொலை.
4. +2 தேர்வில் ஒசூர் மாணவி ரேகா 1,190 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்துள்ளார்.
5. ஹெலிகாப்டர் விபத்தில் அருணாச்சல முதல்வர் மரணம்.
6. I.P.L போட்டிகள் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

பெண்கள் பகுதி

# சிருஷ்டிப்பின் ஒழுங்கும் வீழ்ச்சியும்

**ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்தவர்களாகிய நாம், புதிய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் சட்டத்திற்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த மக்களைக் கட்டுப்படுத்திய பழைய பிரமாணத்திலிருந்து, வித்தியாசப்பட்ட புதிய பிரமா ணத்தை தேவன் தன் பிள்ளை களுக்காக ஏற்படுத்திக் கொடுத் துள்ளார். இருப்பினும், வேதா கம சரித்திர ரீதியாகப் பார்த் தால், மனிதனின் ஆரம்ப காலத் தில் நடந்த காரியங்களால் நாம் பாதிக்கப்பட்டு இருக்கிறோம் என்பது தெரியும்.

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில், பரிசுத்த ஆவியானவர் பவுல் அப்போஸ்தலன் மூலமாக, பெண்களுக்குண்டான சில வேலைகள் மற்றும் அவர் களுடைய நடத்தைகள் பற்றிய போதனைகளை கட்டளையாக கொடுத்துள்ளார்.

சபைகளில் உங்கள் ஸ்திரீ கள் பேசாமலிருக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லு கிறது (I கொரிந்தியர் 14:34) உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்தீரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்.(1தீமோத்தேயு 2:12)

***இந்தக் கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் நடந்த சரித்திர ரீதியான உண்மை களின் விளைவே எனலாம்.***

**** ஆதாம் முன்பு உருவாக் கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். (1 தீமோத்தேயு 2:13)***

**** ஏவாள் வஞ்சிக்கப் பட்டு, மீறுதலுக்கு உட்பட்ட தின் விளைவாக மனுக்குலத் தின் வீழ்ச்சி ஏற்பட்டது. (வசனம் 14)***

I கொரி.: 11:8,9,11,12 ஆகிய வசனப் பகுதிகளில் "புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல. ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றின வள்". "புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்" "ஆகிலும் கர்த்தருக்குள், ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை. புருஷனில் லாமல் ஸ்திரீயுமில்லை". "ஸ்தீரி யானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறது போல, புருஷ னும் ஸ்திரீயினால் தோன்றுகி றான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது".

இந்த வசனப் பகுதிகள் நமக்கு எதை வலியுறுத்துகிற தெனில், சிருஷ்டிப்பின்

ஒழுங்கானது, தேவனுக்கு, ஆதியில் மாத்திரம் முக்கிய மானதாகத் தோன்றாமல், தொடர்ந்து குடும்ப அமைப்புத் திட்டத்திலும் ஒரு முக்கிய பங்கை ஆற்றவே செய்கிறது. மனிதன், முதலாவது உருவாக் பட்டபடியால், மனுஷியினு டைய தலையாக அவன் கருதப்படுகிறான்.

எந்த ஒரு அமைப்பும் ஒழுங்கில்லாமல் செயல்பட முடியாது. கட்டாயம் அதற்கு ஓர் அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரத்தில் இருப்பவர் கள், தங்களுக்குக் கீழ் இருப்ப வர்களின் செயல்களுக்கு பொறுப்பாளிகளாக ஆக்கப் படுவார்கள். ஆதாம் முதலா வது சிருஷ்டிக்கப்பட்டபடியால் தலைமைத்துவப் பொறுப்பு அவனுக்கு கொடுக்கப்பட்டது. "தலைமைத்துவம்" என்பது, அவன் தன் மனைவிக்கு எல்லா வகையிலும் சிறந்த வழிகாட்டி யாக இருந்து, அவளை சரியான பாதையில் நடத்த வேண்டியவனாய் இருந்தான். "பொறுப்பு" என்பது, தனக்குக் கொடுக்கப்பட்ட தலைமைத் துவத்தால், சரியான பாதையில் வழி நடத்தியிருக்கிறானா? அல்லது தவறான பாதையில் வழி நடத்தியிருக்கிறானா? என்று தேவனுக்கு பதிலளிக்க வேண்டியது.

வேறு வகையில் பார்த் தால், ஆணுக்கு கொடுக்கப் பட்ட "தலைமைத்துவம்" "பொறுப்பு" இவைகளெல்லாம் பெண்ணின் முக்கியத்துவத்தை குறைத்து விடாது. உண்மை யில் அவள், "ஆணுக்காக சிருஷ்டிக்கப்பட்டவளாயிருந் தாலும், ஒரு குடும்பத்தில், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதி லும், வளர்ப்பதிலும், ஒரு மனைவியாக, ஒரு தாயாக அவளுடைய பங்கில்லாமல், மனித இனத்தின் தொடர்ச்சியே இருக்காது". இந்த வகையில் ஆண், பெண் ஆகிய இருவரும் ஒருவரையொருவர் சார்ந் திருப்பது மாத்திரமல்ல. தேவ னுடைய திட்டத்திலும் ஒரு முக் கியப் பங்கை வகிக்கின்றனர்.

தேவனுடைய சிருஷ்டிப் பின் கரத்திலிருந்து வந்தபோது, மனுக்குலம் பாவமில்லாமல் பூரணமாகவே இருந்தார்கள். இருப்பினும் தெரிந்தெடுத்துக் கொள்ளக்கூடிய உரிமையை தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். தேவன் சில சட்டங்களை உருவாக்கி, அவைகளுக்கு அவர்கள் கீழ்ப் படிய வேண்டுமென்று விரும் பினார். அந்தக் கட்டளைகளுக் குக் கீழ்ப்படியாமல் போனதா லும், தெரிந்தெடுத்துக் கொள் ளும் உரிமையைத் தவறாக பயன்படுத்தியதாலும், அவர் கள் அந்தப் பூரண நிலையி ருந்து விழுந்து, பாவிகளாக மாறினார்கள். பாவம், ஆவிக் குரிய, சரீர மரணத்தைப் பிறப் பிக்கும் என்று தேவன் ஆதியி லேயே எச்சரிந்திருந்தார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, "நீ தோட் டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்க லாம். ஆனாலும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்ட ளையிட்டார் (ஆதி 2:16, 17)

எனினும் சாத்தான் சர்ப்பத்தின் வடிவில் ஏவாளிடம் வந்து, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்றது.

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, "நாங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; "நீங்கள் சாகவே சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர் களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது".

அப்பொழுது ஸ்திரீயானவள் "அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்" (ஆதி 3:3-6).

அப்போஸ்தலனாகிய பவுல் I தீமோ 2:14 ல் கூறியது போல, ஏவாள் சர்ப்பத்தின் வார்த்தைகளால் வஞ்சிக்கப்பட்டாள். சாத்தானின் வார்த்தைகளால் ஊக்கப்படுத்தப்பட்ட அவள், பாவத்தை இந்த உலகத்திற்கு கொண்டு வந்துவிட்டாள்.

தேவன், பெண்ணுக்காகத் திட்டமிட்ட, குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும்படியாகவே, அவள் பிரத்தியேகமாக அவரால் வடிவமைக்கப்பட்டாள். தன் கணவனுக்கு வாழ்க்கைப் பங்காளியாகவும், தன் வீட்டையும், தான் பெற்றெடுத்த பிள்ளைகளையும் பேணிக் காக்கும்படியாகவே அவளை சிருஷ்டித்தார். (Iதீமோ 5:14, தீத்து 2:4,5) தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் இவ் வேலைகளை அவருக்குப் பிரியமாக நிறைவேற்றுவதற்கு அவள் நம்பிக்கைக்குரியவளாகவும், மென்மையானவளாகவும் குடும்ப நலனில் அக்கறையுள்ளவளாகவும் இருப்பது அவசியம். அப்படி குடும்ப நலனில் மாத்திரம் அக்கறை காட்டி செயல்படும் போது, சில நேரங்களில் தவறான முடிவுகள் எடுக்கவும், மற்றவர்களோடு பிரச்சினைக்குள்ளாகவும் வாய்ப்புண்டு.

சி.எஸ். லூயிஸ் என்பவர் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பணிகளை பற்றி "**ஒப்புக்குக் கிறிஸ்தவம்**" (Mere Christianity) என்கிற தன் புத்தகத்தில் அருமையான கருத்தை எழுதியிருக்கிறார்.

"தலைமை என்று ஒன்று இருக்க வேண்டுமானால், ஏன் அது தான் தலைமையேற்றிருக்க வேண்டுமென்ற விருப்பம் எங்கேயாகிலும் உண்டா? நான் பார்த்த அளவில், தன் வீட்டின்

தலையாக இருக்க விரும்பும் ஒரு பெண், அதே நிலைமை அடுத்த வீட்டில் இருப்பதை அறிந்தால் அதை வழக்கமாக விரும்புவதோ, ரசிப்பதோ இல்லை. தன் கணவனை அடக்கி ஆண்டு கொண்டு, பக்கத்து வீட்டு ஆசாமி பாவம் என்பார்கள். அவர்களிடம், நீங்கள் "கெட்டிக்காரத்தனமாக உங்கள் கணவனை அதிகாரம் செய்து காரியமாற்றுகிறீர்கள்" என்று தன் பாராட்டினால், அய்யய்யோ, நான் அப்படிப்பட்டவளல்ல என்று சொல்லுவார்கள். தாங்கள், புருஷன் மீது அதிகாரம் செலுத்துவது வெளியே தெரியும் போது, தாங்களே அதற்கு வெட்கப்படுகிறபடியாலும், பெண்களுக்கு அடங்கி நடக்கிற ஆண்களை, பெண்களே நிந்திக்கிறபடியாலும், அப்படிச் செய்வது நியாயமற்றதென்று சொல்லாமலே தெரிகிறது.

"ஆனால், இன்னும் ஒரு காரணமும் இருக்கிறது; திருமணமாகாதவனாகிய நான் மனந்திறந்து வெளிப்படையாகப் பேசுகிறேன்; ஏனென்றால், நான் சொல்லப்போகிற காரணத்தை திருமண உறவிற்குள்ளிருந்து பார்த்துப் புரிந்து கொள்வதை விட, அதற்கு வெளியிலிருந்து பார்ப்பது எளிதாக இருக்கும்". வெளி உலகத்தோடு ஒரு குடும்பத்திற்கு இருக்க வேண்டிய உறவு பொருத்த வரையில் (இதை வெளியுறவுக் கொள்கை என்றும் அழைக்கலாம்) அக்குடும்பமானது இவ்வுறவுக்கான இறுதி ஆதாரமாக, ஆணையே சார்ந்திருக்க வேண்டும். ஏனென்றால், பொதுவாக ஒரு ஆண் வெளி உலகத்தாரோடு நியாயமாக நடந்து கொள்வான். அவன் நிச்சயம் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் பிரதானமாக தன் கணவனையும், குழந்தைகளையும் வெளி உலகத்திலிருந்து பாதுகாக்கும்படி, அவர்களுக்காக போராடுகிறவளாக இருக்கிறாள். தன் தேவைகளைக் காட்டிலும், அவள் தன் குடும்பத்தாரின் தேவைகளைச் சந்திக்க முற்படுவது இயல்பானதாகவும், ஒரு விதத்தில் சரியானதாகவுமே இருக்கிறது. தன் குடும்பத்தாரின் தேவைகளை நிறைவேற்றுவாள் என்ற விஷயத்தில் இவள் சிறந்த நம்பிக்கைக்குரியவளாக இருக்கிறாள். அவள், இப்படி தான் குடும்பத்தாருக்கு கொடுக்கும் முக்கியத்துவங்களால், ஒரு மனைவி, நானே இவ்விஷயத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றுவிடாதபடி, பார்த்துக் கொள்வது கணவனுடைய கடமை.

மனைவிக்கு இருக்கும் தீவிரமான குடும்பப்பற்றினால், அவள் மற்றவர்களுக்கு தீமையான காரியம் செய்து விடாதபடி, அவர்களைப் பாதுகாப்பதில் கணவனே இறுதியான அதிகாரமுடையவனாக இருக்கிறான்.

"இதில் உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால், ஓர் எளிமையான கேள்வியை நான் கேட்கிறேன்". அடுத்த வீட்டிலிருக்கும் பிள்ளையை உங்கள் நாய் கடித்து விட்டால், அல்லது

அடுத்த வீட்டு நாய் உங்கள் குழந்தையை சாயப்படுத்தி னால், யாரை நீங்கள் முதலில் எதிர் கொண்டு சமாளிக்க வேண்டியதிருக்கும்? அந்த வீட்டு தலைவியையோ அல்லது தலைவரையா? நீங்கள் திருமண மான பெண்ணாக இருந்தால், உங்களிடம் நான் இந்தக் கேள்வியை கேட்கிறேன். உங்கள் கணவனைப் பற்றி புகழுவதைப் போலவே, அவனுடைய அணுகுமுறையில் இருக்கும் தவறைக் குறித்து சொல்லும் போது, அவர் தன்னு டைய மற்றும் உங்களுடைய விருப்பங்களுக்காக அயலா ரோடு போராடுவதில் நீங்கள் நினைக்கும் அளவுக்கு தீவிரம் காட்டுவதில்லை என்றும், அவர் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகிறவர் என்றும் சொல்லு வீர்கள்? அப்படித்தானே !

ஏவாளிடம் இருந்த இந்த குணாதியசங்களினால், அவள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதை விட, சாத்தானு டைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படிவது, தன் குடும்பத்திற்கு சிறந்ததாக இருக்குமென்று எண்ணினாள். ஒரு வேளை இப்படிப்பட்ட நினைப்புத் தான் அவளை சாத்தானுக்கு செவி கொடுக்கும்படி செய்து இருக்கும். அவள் இப்படி யோசித்தது தவறானது, மாத்தி ரமல்ல, அது மனித குலம் அனைத்திற்கும் ஆபத்தை விளைவித்தது.

இந்த பரிதாபமான நிகழ் வில், முதல் முறையாக ஒரு பெண் தன் கணவனிடமிருந்து தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்வதை நாம் காண்கி றோம். ஓர் ஆணும், முதல் முறையாக அப்படிச் செய்யும் படி அனுமதிப்பதையும் பார்க்கி றோம். ஏவாள், ஆதாமிடம் அந்தக் கனியைப் பறித்துப் புசிப்பது குறித்து ஆலோசனை செய்தாள் என்பதற்கு நமக்கு ஆதாரம் இல்லை. ஆதாமும், தேவ கட்டளையை நன்றாக அறிந் திருந்தும், (ஆங்கில வேதம், ஆதாம் ஏவாளோடு தான் இருந்தான் என்று சொல் கிறது). (With him) அப்படி அவளோடு அவன் இருந்தும், அவன் அவளை தடை செய்த தாகத் தெரியவில்லை. ஒரு குடும்பத்திற்கான தலைமைத் துவத்தைப் பற்றிய தேவனு டைய திட்டத்தைத் தலைகீழாக மாற்றியதால், மீறுதலுக்கு உட்பட்டு, மனித குலம் வீழ்ந்து போனது என்பது எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது.

## சத்தியம்

* சத்தியம் நம்மை விடுதலையாக்கும் (யோவான் 8:32)
* சத்தியத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும் (எபேசியர் 3:3,4)
* சத்தியம் குறைவற்றது (சங்கீதம் 19:7)
* சத்தியம் வல்லமையுள்ளது (எபிரெயர் 4:12,13)
* சத்தியத்தால் நம்மை சுத்தப்படுத்த முடியும் (சங்கீதம் 19:9)
* சத்தியம் நம்மை பக்தி விருத்தி அடையச் செய்கிறது (அப்போஸ்தலர் 20:32)
* சத்தியம் என்றென்றும் நிலைத்து நிற்கும் (மத்தேயு 24:35)

வாலிபர் பகுதி

# விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு

**பென்னிமார்ட்டின்**

**மேற்**சொல்லப்பட்ட வார்த்தைகள் அப்போஸ்தலனாகிய பவுலால் தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தமக்குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு சொல்லப்பட்டிருந்தாலும் கூட, இந்த வார்த்தைகள் விசுவாசிகளாயிருக்கிற எல்லா வாலிபர்களுக்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளது. தீமோத்தேயு இளம் பிரசங்கி யாராக இருந்தால், அவர் விசுவாசிகளுக்கு எல்லாவற்றிலும் அதாவது வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவி யிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரியாக இருக்க வேண்டு மென்று பவுலால் அறிவுறுத்தப்பட்டார். இங்கே வாலிபனாகிய தீமோத்தேயு மட்டுமல்ல வாலிபர்களாகிய நாம் ஒவ்வொருவரும் விசுவாசிகளுக்கும், இந்த உலகத்தாருக்கும் மாதிரியாக இருக்க வேண்டும். உண்மையாகவே, நாம் எப்படி போதிக்கப்படுகிறோ மோ அப்படியே நடக்க வேண்டும். நாம் அப்படிச் செய்யவில்லை யென்றால் நம் கிரியைகளினிமித்தம் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படும் (ரோமர் 2:17-24). இப்போது நாம் எவைகளி லெல்லாம் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டு மென்று ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## I. வார்த்தையில் மாதிரியாக இருக்க வேண்டும்

நாம் ஒவ்வொருவரும் பேசுகிற வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் தேவையற்ற வீணான வார்த்தைகளைப் பேசக்கூடாது. நம் வார்த்தைகளை ஜனங்கள் கவனிக்கிறார்கள் என்பதை உணர்ந்து பேச வேண்டும். கிறிஸ்தவர் களாகிய நாம் நம் வார்த்தைகளினாலே நீதிமான்கள் என்றும், குற்றவாளிகள் என்றும், தீர்க்கப்படுவோம் என்று வேத வசனம் சொல்கிறது (மத்தேயு 12:37). நியாயத்தீர்ப்பு நாளிலே ராஜாவாகிய இயேசு கிறிஸ்து நாம் பேசிய ஒவ்வொரு வார்த்தைக் குறித்தும் நியாயந்தீர்ப்பார் என்பது நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, நாம் கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளையே பேச வேண்டும் (எபேசியர் 4:29). நம் வாயின் வார்த்தைகளினால் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாய் வாழ வேண்டும்.

## II நடக்கையில் மாதிரியாக இருக்க வேண்டும்

வாலிபர்களாகிய நம்முடைய நடக்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமாக இருக்க வேண்டும் (பிலிப்பியர்

1:27). இந்த உலகத்தின் மக்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை மிக உயர்வாக கருதுகிறார்கள். நாம் கிறிஸ்துவின் உபதேசத்தின் படி வாழவில்லையென்றால் அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை அவமதிப்பார்கள். அவர்கள் மற்ற மதங்களின் உபதேசங்களையும், தத்துவஞானிகளின் உபதேசத்தையும் உதறித்தள்ளிவிட்டு கிறிஸ்துவின் உபதேசத்திற்கு செவி சாய்க்க வேண்டுமென்றால் நாம் அதற்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் தாறுமாறாக நடந்து கிறிஸ்துவின் உபதேசத்தைத் தூஷித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நம்முடைய நல்நடக்கையினால் அநேகரை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற வாழ்க்கையை வாழ வேண்டும். தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால் அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார் (1பேதுரு 1:16).

### III அன்பில் மாதிரியாக இருக்க வேண்டும்

நாம் அன்பில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். இங்கே அன்பை நாம் மூன்று விதமாகப் பிரித்து விடலாம். ஒன்று நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்பு கூருவதில் சிறந்து விளங்கி அதில் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். இன்னொன்று நாம் சகோதர, சகோதரிகளிடத்தில் அன்பு கூருவதில் மாதிரியாக இருக்க வேண்டும். சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூர வேண்டும் என்று வேத வசனம் சொல்கிறது (1பேதுரு 1:22), இதில் சத்துருக்களை சிநேகிப்பதும் உள்ளடக்கம், சத்துருக்களை சிநேகிப்பதென்பது உலகத்தின் மக்களால் முடியாத காரியம், எனவே இதில் நாம் மாதிரியாக இருந்து விட்டால் கிறிஸ்தவத்தை நாம் உயர்த்திகாட்ட முடியும். பாவத்தில் மரித்தவர்களை நாம் நேசித்து அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதினால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்கள் கழுவப்பட முடியும், அவர்கள் இந்த உலகத்தில் சிறந்த வாழ்க்கையை வாழ முடியும்.

### IV ஆவியில் மாதிரியாக இருக்க வேண்டும்

இங்கே ஆவி என்பது மனநிலை அல்லது மனப்பான்மையை குறிக்கிறது. வாலிபர்களாகிய நாம் விட்டுக்கொடுக்கிற மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும். இன்று வாலிபர்கள் மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அறவே இல்லை என்கிற குற்றச்சாட்டு காணப்படுகிறது. அதேப் போல நாம் மற்றவர்கள் மீது கரிசனை உடையவர்களாக காணப்பட வேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் (கலாத்தியர் 6:2). சுருக்கமாகச் சொல்லப்போனால் நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும் (பிலிப்பியர் 2:5). இந்த உலகத்தில் நாம் காண்கின்ற கூச்சல், குழப்பம், சண்டைகள்,

யுத்தங்கள் எல்லாவற்றிற்கும் காரணம் கிறிஸ்துவின் சிந்தை இல்லாததுதான். எல்லோருமே சிந்தையைப் பெற்றுக் கொண்டால் இந்த உலகம் எவ்வளவு அழகானதாக, இன்பமானதாக இருக்கும்!.

**V விசுவாசத்தில் மாதிரியாக இருக்க வேண்டும்**

நம்முடைய விசுவாசம் பிறர் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கு தூண்டுகோலாக அமைய வேண்டும். விசுவாசம் என்பது எபிரெயர் 11:1ன் படி நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது தேவதாசர்கள் தேவன்மீது விசுவாசம் வைத்து வாழ்ந்தார்கள். நம் விசுவாசம் பிறர் காணத்தக்கதாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தின்படி நடக்கும் போது அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தங்களை எல்லாம் நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் விசுவாசத்தினாலே தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான் என்று விசுவாசிக்கிறோம் (எபிரெயர் 11:8). அப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் உடையவர்களாக இருக்கும்போது பிறர் அதைக்கண்டு தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு தூண்டப்படுவார்கள்.

**VI கற்பில் மாதிரியாக இருக்க வேண்டும்**


வாலிபர்களாகிய நாம் எல்லாவிதத்திலும் நம் கற்பை காத்துக் கொள்ள வேண்டும். இந்த உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று நாம் அறிந்திருக்கிறோம் (1யோவான் 5:19). பாவம் நிறைந்த இந்த உலகில் நம்மை நாம் கறைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். எல்லாவித வேசித்தனத்திற்கும் நாம் விலகியோட வேண்டும். நாம் நம் செயல்களில் மட்டுமல்ல எண்ணங்களிலும் சுத்தமாக இருக்க வேண்டும். மகிமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு களங்கம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால் நம்மை நாம் எல்லாவிதத்திலும் சுத்தமாக காத்துக்கொள்ள வேண்டும். வாலிப வயதை ஆட்டிப்படைக்கின்ற பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நாம் விலகியோட வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார் (2தீமோத்தேயு 2:22) நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (1தெசலோனிக்கேயர் 5:23).

பிரியமான வாலிபர்களே மேற்சொல்லப்பட்ட ஆறு காரியங்களில் நீங்கள் விசுவாசிகளுக்கும் இந்த உலகத்தின் மக்களுக்கும் மாதிரியாக இருந்தால் அநேகரை கிறிஸ்தவர்களாக்க முடியும், புறஜாதிகள் மத்தியில் தேவன் மகிமைப்படுவார். எனவே நாம் தீவிரமாக செயல்படுவோம் அதற்கு தேவன் எல்லாவிதத்திலும் உதவிச் செய்வாராக! ஆமென்!.

சிறுவர் பகுதி

# யானை

ABEL R. NAYAGAM



கிறிஸ்துவுக்குள் பிரியமான அருமை பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள், வாழ்த்துக்களோடு பாராட்டையும் தெரிவிக்கிறேன். ஏனென்றால் நீங்கள் உங்கள் தேர்வு முடிவுகளை பெற்றிருப்பீர்கள்! ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்கு சென்றிருப்பீர்கள்! கோடை விடுமுறை நாட்களை மிகவும் சந்தோஷத்தோடே கழித்துக்கொண்டிருக்கிறீர்களா? எவ்வளவு சந்தோஷமாக இருந்தாலும், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை ஒரு கனமும் மறந்து விட கூடாது. நீங்கள் இருக்கும் இடத்தில் VBS போன்ற கோடை வகுப்புகளில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும்.

சரி, அதிகமாக உங்கள் நேரத்தை எடுக்காமல் நேராக பாடத்திற்குள்ளாக செல்வோம். நம் தேவன் எவ்வளவு மகத்துவமானவர், வல்லமையுள்ளவர், ஞானமுள்ளவர் என்பதை நாம் காணும் அவரது சிருஷ்டிப்பிலிருந்து உணரலாம். சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் தேவனை மகிமைபடுத்திக் கொண்டிருக்கின்றன. நாம் பல சமயங்களில் அவைகளை மெச்சுவதில்லை. அப்படி சிருஷ்டிக்கப்பட்ட ஒரு விஷயத்தை குறித்து நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

நீங்கள் எப்போதாவது யானையின் தும்பிக்கையை அருகில் சென்று பார்த்ததுண்டா? நம்மில் அநேகர் அதை யானையின் நீளமான மூக்காக எண்ணுகிறோம். அது சரிதான். ஆனால் அதன் அமைப்பை, உபயோகத்தை கேட்டால் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள். மனிதர்களாகிய நாம் நம் கையை எதற்கெல்லாம் பயன்படுத்துகிறோமோ, அதைப் போல யானைகளும் அவைகளின் தும்பிக்கையை உபயோகிக்கின்றன.

அதன் தும்பிக்கையின் பிரம்மாண்டத்தை பார்ப்போம்!. 6 வித்தியாசமான தசைகளை உள்ளடக்கியது. மொத்தம் 100,000 தசை நார்களை கொண்டவை. மனிதனின் மொத்த உடலில் இருப்பதோ வெறும் 639 தசை நார்கள். ஆச்சரியமாக இருக்கிறது தானே!. தும்பிக்கைகளின்

உயரம் குறைந்தபட்சம் 6 அடி உயரமும் 150 கிலோ எடையும் உடையவை. சில சமயம் யானைகள் அதன் தும்பிக்கையை அதன் எடையின் காரணமாக தந்தங்களின் மேல் போட்டுக் கொள்ளும். தும்பிக்கையின் நுனியில் பார்த்தால், பிடித்து கொள்வதற்கு ஏற்றவாறு விரல் போன்ற அமைப்பு உள்ளது. அவை பொருட்களை எடுப்பதற்கு பயன்படுகின்றன. யானை தண்ணீர் குடிக்கும் போது முதலில் தண்ணீரை தும்பிக்கைக்குள்ளான இழுத்துக் கொண்டு, பின் வயிற்றுக்குள்ளாக வளைத்து பிறகு குடிக்கின்றன. வெப்ப காலங்களில் குடிப்பதற்கு மட்டுமன்றி நீரை தன் உடம்பின் மீது பீச்சி அடித்துக் கொள்ளும். யானைகள் தண்ணீரில் கூட நீந்துவதற்கு தும்பிக்கைகளை பயன்படுத்துகின்றன.

மேலும், யானையின் வளர்ச்சியை பொருத்து 200 கிலோ-450 கிலோ எடை வரை தூக்கும் திராணி கொண்டவை. தும்பிக்கையை வைத்து மரத்தை உடைத்து தூக்கவும் செய்ய முடியும், ஒரு சிறிய மரத்துண்டையும் துல்லியமாக எடுக்கவும் முடியும். புல், இலை போன்றவற்றையும் எடுக்க முடியும்.

யானைகள் தும்பிக்கையை தற்பாதுகாப்பிற்கும் பயன்படுத்துகின்றன. சத்தமிடுவதற்கும், மிரட்டுவதற்கும், வீசுவதற்கும் சில சமயம் சண்டை போடுவதற்கும் பயன்படுகின்றன. தன் கோபத்தை தும்பிக்கையை தரையில் ஓங்கி அடிப்பதன் மூலம் காட்டுமாம். புதிதாக சில ஆராய்ச்சியாளர்கள் எல்லா மிருக இனங்களிலும் மிக துல்லியமான மோப்ப சக்தி யானைகளுக்கு உண்டு என்று கண்டு பிடித்துள்ளனர். எவ்வளவு ஆச்சரியம்!! நம்மால் அதிகமாக மெச்சபடாத ஒன்றில் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதே!!!.

தேவனின் சிருஷ்டிப்பை உற்றுப்பார்த்தாலே அவருடைய அநந்தஞானமும், பராக்கிரமும் நமக்கு விளங்கும். இப்படிப்பட்ட தேவனை தான் நாம் தெய்வமாக கொண்டுள்ளோம். அவைகளிலும் விசேஷமாக படைக்கப்பட்ட நாம், நம்மை உற்று பார்க்கிறவர்கள் தேவனுடைய அன்பையும், தேவனுடைய தன்மையையும் மெச்சும் படியான வாழ்க்கையை வாழ்கிறோமா? அப்படிச் செய்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## இன்றே இயேசுவை நோக்கிப்பாருங்கள்

அவருடைய கண்களில் ஜீவ ஒளி இருக்கிறது.....

அவருடைய குரலில் சத்திய வார்த்தை இருக்கிறது.....

அவருடைய பாதங்களில் சமாதான வழிகள் இருக்கிறது.....

அவருடைய கரங்களில் ராஜ்யத்தின் பணி இருக்கிறது.....

அவருடைய இருதயத்தில் பிதாவின் அன்பு இருக்கிறது.....

# " துருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 8 துருவின் சாட்சி

### உறுதி எடுத்துக் கொடுப்பதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?

**நோக்கம்**

**நா**ம் மனதிலே முன்னதாகத் தீர்மானம் செய்தால் தான், நம்முடைய வருமானத்திலிருந்து வசனத்தின்படியும், சீராகவும், தாராளமாகவும் கொடுக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள உதவுவது.

**உங்கள் சிந்தனைக்கு**

மனிதனுக்கு மாற்றம் தேவை; முதலில் சிந்தனை மாற்றம், பின்பு இருதய மாற்றம், அதன்பின்பு கொடுத்தல் சம்பந்தமான மாற்றம்.

**முன்னுரை**

படிப்பில்லாவிட்டால் யாராலும் வேதாகமத்தை வாசிக்க முடியாது, அது போலவே, மனதிலே நியமித்துக் கொள்ளா விட்டால் யாராலும் கொடுக்கவும் முடியாது, ஒருவன் கொடுக்க மறுக்கும்போது கூட தன்மனதிலே நியமித்துத் தானே அப்படிச் செய்ய வேண்டும். கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பது சம்பந்த மாக மனதிலே நியமித்துக் கொள்வது, உறுதி எடுத்துக்கொள்வது, வாக்குக் கொடுப்பது என்பது உணர்ச்சி சம்பந்தப்பட்ட ஒன்று. நாம் ஒருவருடைய பணப்பையை தொடும்போது, நாம் உண்மை யிலேயே அவருடைய மென்மையான இடத்தை தொடுகிறோம். இது லேசாக சொல்லப்பட வேண்டிய ஒரு காரியம் அல்ல. ஏனென்றால், பவுல், பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராயி ருக்கிறது என்றார். ஒருவர் தன் சொந்த நலனுக்காக ஒன்றைச் செய்வதாக உறுதிமொழி எடுத்துவிட்டு, சபையின் நலனுக்கு எதுவும் செய்வதாக உறுதிமொழி எடுக்காமல் இருக்கும் போது அவர் தான் தேவனோடு நேர்மையாக இருப்பதாக எப்படி சொல்லிக்கொள்ள முடியும்?. பளிச்செனத் தெரியக்கூடிய ஓர் உண்மை என்னவென்றால், அப்படிச் செய்ய பண ஆசை தடுக் கின்றது. வேதாகமத்தில் மிகப் பரிதாபமான வார்த்தைகள் அந்த பணக்கார வாலிபனைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவன் துக்கமடைந்தவனாய் போய் விட்டான் என்று.

நியமித்தல் என்ற வார்த்தைக்கான பொருள் ஒன்றைச் செய்வதற்காகத் தீர்மானிப்பது அல்லது முடிவெடுப்பது ஆகும். சபையின் மூப்பர்கள், ஒவ்வொரு வருடமும் கூடி, சில குறிப்பிட்ட பணிகளுக்கு உதவி செய்வது சம்பந்தமாக முடிவெடுக்கும்

போது, எதற்கு வாக்குக் கொடுக்கலாம், எதற்கு உறுதி கொடுக்க லாம் என்று விவாதிக்கிறார்கள். மூப்பர்கள் ஒரு ஊழியக்காரரை ஊழியக்களத்திற்கு அனுப்பி ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்கு கொடுப்பது, நியமிப்பது அல்லது உறுதி செய்வதாயிருக்கிறது. இப்போது உங்கள் அயலகத்தார் ஞானஸ்நானம் பற்றிய பாடத்தை படிக்க வேண்டும் என்று நீங்கள் எப்படி உண்மையாய் விரும்புவீர்களோ அதுபோல இந்த பாடத்தையும் நேர்மையாகப் படிக்க வாருங்கள்.

**I நியமித்தலுக்கு வசன அடிப்படையிலான அதிகாரம்**

தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகா தென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு தன்னை தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். (தானியேல் 1:8) தானியேல் தன் மனதில் தீர்மானித் துச் செய்யப்பட்டது தவறு என்று யாராலும் சொல்ல முடியுமா? ஆனால், சபை அங்கத்தினர்கள் தானியேலே, தீர்மானிப்பது தவறு, நான் உன்னைப்போல் செய்யமாட்டேன் என்று சொல் வதை என்னால் கேட்க முடிகிறது.

இவைகள் முடிந்த பின்பு பவுல் மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம் பண்ணிக்கொண்டு நான் அங்கே போன பின்பு ரோமாபுரியையும் பார்க்க வேண்டியதென்று சொல்லி (அப். 19:21).

உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும், இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை (ரோமர் 1:13).

உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந் தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். (ஏசாயா 46:11).

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (II கொரிந் தியர் 9:7). இந்த வசனங்களை வாசித்து நியமிப்பதை விசுவா சிக்க மறுத்துவிட்டு, நான் நேர்மையாயிருக்கிறேன் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. இந்த வசனங்களை விசுவாசிக்க மறுப்பது வேதாகமத்தை விசுவாசிக்க மறுப்பதாகும், அது பாவமாகும்.

நியமித்தலை அல்லது தீர்மானித்தலை நான் நம்புவதில்லை என்று சொல்வது ஒரு சாதாரண காரியமாகிவிட்டது. ஏன்

நம்புவதில்லை? வேதாகமம் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் என்று எவ்வளவு வெளிப்படையாக போதிக்கிறதோ அது வெளிப்படையாகவே, தெளிவாகவே போதிக்கிறது. ஒருவர் சொல்கிறார், மனிதில் நியமித்துக் கொள்வேன் ஆனால் எழுதித் தரமாட்டேன் என்று நான் உண்மையைச் சொல்வேன் ஆனால், எழுத்து வடிவத்தில் அதைத் தரமாட்டேன் என்று ஒருவர் சொன்னால் அவரைப் பற்றி என்ன நினைப்பீர்கள்? இங்கே உண்மை என்னவென்றால், நான் உண்மையை சொன்னால், அதை எழுதிக் கொடுப்பதில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. நான் பொய் சொல்கிறதாயிருந்தால் அதை எழுதுவது எனக்குப் பிடிக்காது. தீர்மான அட்டையில் கையெழுத்திடுவதில் நம்பிக்கை இல்லாத ஒருவர் தன் வருமானத்திற்குச் சம்பந்தமில்லாமல் குறைவாகக் கொடுக்கிறபடியால், மற்றவர்கள் அதைப் பார்த்து விடுவார்கள் என வெட்கமடைவதால் அதில் கையெழுத்திட அவர் விரும்புவதில்லை. இது தவிர வேறு காரணங்கள் ஏதாவது உங்களுக்குத் தெரியுமானால் சொல்லுங்கள். அது குறித்து என் அடுத்த புத்தகத்தில் எழுதுவேன்.

உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணிச் சொன்ன உற்சாக பலியை செலுத்தித் தீர்ப்பாயாக (உபாகமம் 23:23), இந்த ஜனங்கள் கட்டாயமில்லாத காணிக்கைகளில் கூட தீர்மானம் செய்து கொடுத்துள்ளார்கள் (ஆதி. 28:20-22). வசனங்களில் யாக்கோபு தேவனுக்கு தசமபாகம் கொடுப்பதாக பொருத்தனை செய்து, வாக்குக் கொடுத்தான் அல்லது உறுதி எடுத்துக் கொண்டான் என்று பார்க்கிறோம்.

**(தொடரும்)**

## ஒரு கிறிஸ்தவன் எப்படி இருக்கிறான்?

**ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்து சிந்திக்கும் மனதாயிருக்கிறான்**

**ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்து நேசிக்கும் இருதயமாயிருக்கிறான்**

**ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்து பேசும் குரலாயிருக்கிறான்**

**ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்து உதவும் கரமாயிருக்கிறான்.**

தொடர் கட்டுரை

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 7. ஆரோக்கியமான உபதேசம்

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதத்திலும் உங்களை இந்த தொடர் கட்டுரையின் மூலமாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ள ஆரோக்கியமான உபதேசம் என்ற இந்த பாடம் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

### I எது ஆரோக்கியமான உபதேசம்?

எது ஆரோக்கியமான உபதேசம் என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பாக எது ஆரோக்கியமில்லாத உபதேசம் என்பதை அறிந்து கொள்வோம். இன்று போதிக்கப்படுகின்ற பெரும்பாலான உபதேசங்கள் ஆரோக்கியமானதல்ல! ஏனென்றால், அவைகளிலும் கலப்படம் நிறையக் காணப்படுகின்றன. ஆதலால் அப்போஸ்தலர்கள் அநேகரைப் போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம் என்றார்கள் (II கொரி. 2:17).

இன்றைய நாட்களில் உணவுப் பொருட்களில் கலப்படம் காணப்படுவது போல உபதேசங்களிலும் கலப்படம் நிறைய காணப்படுகிறது. மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட இரட்சிப்பின் திட்டத்தில், தேவன் சொல்லாத உபதேசமான இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம், குழந்தை ஞானஸ்நானம் போன்ற உபதேசங்கள் தேவனால் கொடுக்கப்படவில்லை! வேதத்தில் இல்லாத உபதேசங்கள் மனுஷரால் கொண்டு வரப்பட்டதாகும். மேலும் கைகளைத்தட்டி, ஆரவாரம் செய்து அந்நிய பாஷை என்ற பெயரில் உளறுவது போன்றவைகள் புதிய ஏற்பாட்டில் இல்லை. ஜனங்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்றப் போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும் என்ற வேத வசனத்திற்கொப்ப இன்றைக்கு ஆரோக்கியமற்ற உபதேசத்தில் பிரியமாயிருக்கிறார்கள் (II தீமோத். 4:2-4).

ஆரோக்கியமான உபதேசம் என்பது வேத வசனத்தை மட்டும் போதிப்பதாகும். அப்போஸ்தலர்கள் வேத வசனத்தை மட்டும் போதித்தனர். அப்போஸ்தலருடைய உபதேசத்தை மட்டும் ஆதி கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்களுடைய உபதேசத்தில் உறுதியாயிருந்தனர். (அப். 2:42) மனுஷன் இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்து "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்றார் (மாற்கு 16:16) அதன்படி ஜனங்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 2:38,41, 8:37-38) இந்த வசனங்களில் சிறுகுழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றதாக இல்லை. வேதத்தில் இல்லாததை நாம் யூகிக்ககூடாது. ஒருவருடைய சிந்தனையானது விசுவாசத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். அந்த விசுவாசம் வேத வசனத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். (ரோம 10:15-17) மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் (ரோம 8:6,7) ஆரோக்கியமான உபதேசத்தைக் குறித்து வேத வசனம் கூறுவதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும். (1பேதுரு 2:1-3).

ஆரோக்கியமற்ற உபதேசங்களான கட்டுக்கதைகள், வம்ச வரலாறு, பாரம்பரியங்கள் போன்ற உபதேசங்கள் தெய்வீக பக்தி விருத்திக்கு ஏதுவல்லாததாக உள்ளது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்கள், சமீபத்தில் சாம்பல் புதன்கிழமை, லெந்து நாட்கள், பெரிய வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகை கொண்டாடினார்கள். இவைகள் எல்லாம் வேதத்தில் இல்லாதவைகளாக உள்ளது. இது பாரம்பரியமாக செய்து வருகிறார்கள். இவைகள் மனுஷருடைய போதனையாக உள்ளது. இச்செயல் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணப்படுவதாகும் (1கொரி. 4:6).

ஆரோக்கியமான உபதேசமானது தவறான உபதேசத்தோடு ஒத்துப்போகாமல் அப்படிப்பட்ட உபதேசத்தைக் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்ல வேண்டும் (II தீமோ 4:2) தவறோடு நாம் ஒத்துப்போனால் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் நாம் பங்குள்ளவர்களாயிருப்போம் (II யோவான் 9-11) ஆதலால், நாம் ஆரோக்கியமான உபதேசத்தைப் பின்பற்ற வேண்டும். ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் (I பேதுரு 4:11).

### II எந்த உபதேசத்தை விசுவாசிக்க வேண்டும்?

இன்று அநேகர் எல்லா உபதேசங்களையும் விசுவாசிக்கின்றனர். ஆனால் வேத வசனத்தில் உலகத்திலே அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றி இருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள் என்று கூறுகின்றது (I யோவான் 4:1) எனவே நாம் எல்லா உபதேசங்களையும் விசுவாசிக்கக்கூடாது. அந்த

உபதேசம் தேவனால் உண்டானதாக இருக்கின்றதா என்று வேதத்தை வைத்து சோதித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் வேத வசனம் உண்மையைக் கூறும் கண்ணாடியாக உள்ளது. (யாக். 1:21,23) அது அளவுகோளாக, தூக்கு நூலாக இருக்கிறது (வெளி. 21:16, ஆமோ 7:7). எனவே நாம் வேத வசனத்தை வைத்து இந்த உபதேசம் தேவ னால் உண்டாயிருக்கிறதா அல்லது மனிதனால் உண்டாயிருக்கிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும்.

தவறானதை நம்புவதைக் குறித்து பழைய ஏற்பாட்டில் ஒரு உதாரணத்தைப் படிப்போம். யாக்கோபின் குமாரர்களில் இளைய வனாக, அழகாக இருந்த யோசேப்பை யாக்கோபு அதிகமாக நேசித்தார். அதனால் மற்ற குமாரர்கள் எல்லாம் யோசேப்பின் மீது பொறாமை அடைந்தனர். அதன் விளைவு அவர்க ளுக்கு ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருப்பவர்களுக்கு உணவுக் கொண்டு வந்த யோசேப்பைக் கட்டிப்போட்டு இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டு, அவனுடைய அங்கியை வெள்ளாட்டுக்கடா ஒன்றை அடித்து அதின் இரத்தத்தில் அவனுடைய அங்கியை தோய்த்துக் கொண்டு வந்து தன் தகப்பன் யாக்கோபினிடத்தில் கொடுத்து ஒரு துஷ்டமிருகம் கொன்று போட்டதாக யாக்கோபு நம்பினார் (ஆதி. 37:33-35) சுமார் முப்பது வருடங்களாக இந்த தவறான தகவலை நம்பினார். பின்பு அநேக வருடங்களுக்குப் பிறகு யோசேப்பு வாலிபனாக எகிப்திலே அதிபதியாக இருக்கிறார் என்று யாக்கோபின் குமாரர்களே சொன்னார்கள். ஆனால், யாக்கோபு முதலில் நம்ப வில்லை (ஆதி. 45:26) பின்பு உண்மை எது என்பதை நம்பினார்.

இன்றும் அநேகர் தவறான உபதேசத்தை முப்பது வருடங் களுக்கு மேலாக விசுவாசித்து வாழ்கின்றனர். பின்பு, உண்மையான உபதேசத்தை அறிந்தும் அதை விசுவாசிப்பதில்லை ஏனென்றால் தவறான உபதேசத்தில் முப்பது வருடங்களாக ஊறியிருப்பதால் அதிலிருந்து மீண்டு வர விருப்பமில்லை. ஆகையால் அவர்கள் தவறான ஆரோக்கியமில்லாத உபதேசத்தில் இருக்கின்றார்கள். ஆனால், வேத வசனத்தை விசுவாசித்தால் தவறான உபதேசத்தை தவிடு பொடியாக்கி ஆரோக்கியமான உபதேசத்தை நிலை நிறுத்த முடியும். அப்போஸ்தலனாகிய பவுல் நியாயப்பிரமாணத்தின்படி வளர்க்கப்பட்டு பரிசேயனாக இருந்து கிறிஸ்தவர்களை கொடுமைப் படுத்தியவர். (அப். 22:1-16) நியாயப் பிரமாணம் தவறான உபதேசம் என்று உணர்த்தப்பட்டார். உடனே உண்மையான கிறிஸ்து வின் உபதேசத்தை விசுவாசித்து, மனந்திரும்பி பாவங்கள் போக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, ஆரோக்கியமான உபதேசத் தைக் குறித்து போதித்தார். கள்ளப் போதகத்தால் அநேக வருடங்கள் ஊறிப் போய் இருந்தாலும் கிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசம் அப்படிப்பட்டவர்களை மனமாற்ற வல்லமையுள்ளதாக இருக்கிறது (ரோ. 1:16).

நாம் விசுவாசிக்கக் கூடியதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதும் கிறிஸ்துவினால் உண்டாயிருக்கிற ஆரோக்கிய உபதேசம். நாம் புறக்கணிக்க வேண்டியதும், உதறித்தள்ளுவதும் சாத்தானால் உண்டாயிருக்கிற பொய்யான உபதேசம் (யோ. 8:44) விசுவா சத்தாலே ஆரோக்கியமுள்ளவர்களாக இருப்போம் (தீத்து 1:14).


### III ஆரோக்கியமான உபதேசத்தினால் உண்டாகும் நன்மைகள்

ஆரோக்கியமல்லாத, பொய்யான உபதேசத்தால் சரீர நன்மைகள் ஏராளமாகக் கிடைக்கலாம். ஆனால் ஆவிக்குரிய நன்மை கள் ஒன்றும் கிடைக்காது (வெளி. 22:15). இந்த பொய்யான உபதேசத்தால் வைராக்கியமாக இருந்த யூதர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தனர் (மாற். 14:55-59) இந்த பொய்யான உபதேசம் ஸ்தேவானை கல்லெறிந்து கொலை செய்யும்படி வழி நடத்தியது (அப். 7:57,58) இன்றும் இப்படிப்பட்ட உபதேசத்தினால் அநேகர் ஆவிக்குரிய மரணம் அடைந்திருக்கிறார்கள். (ரோ 5:12) பாவம் என்ற வியாதியினால் மரணமடைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வியாதியிலிருந்து குணப் படும்படியாக ஆரோக்கியமான உபேதசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆரோக்கியமான உபதேசத்தால் நாம் குணமடைகிறோம் என்று வேத வசனம் கூறுகின்றது. (வெளி. 22:2).

ஆரோக்கியமான உபதேசத்தால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். (மாற். 16:15,16) இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தமது சபையி லே சேர்த்துக்கொள்கிறார். (அப். 2:47) நாம் சபையிலே வாரத்தின் முதல் தோறும் அப்பம் பிட்டு ஆராதனை செய்யும் சிலாக்கியம் பெறுகின்றோம். (அப். 2:47, 20:7). ஆரோக்கியமான உபதேசத்தி னால் நாம் ஜீவகிரீடம் பெறுகின்றோம் (வெளி. 2:10).

நம் சரீரத்திற்கு ஏற்காத பலவிதமான ஆகாரம் பல நோய்களை உண்டாக்குகிறது போல பலவிதமான அந்நிய போதனைகளும் ஆவிக்குரிய நோய்களை உண்டாக்கிவிடும். எனவே பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜன பதார்த்தங்களினால்ல கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது. (எபி. 13:9) ஆரோக்கியமான உபதேசத்தினால் தேவ கிருபை பிரசன்னமாயிருக்கிறது (தீத்து 2:11-13). இந்த கிருபையினாலே நாம் பலமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் ஆரோக்கியமான உபதேசத்தினாலே பலமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதற் காக தேவ கிருபை பிரசன்னமாகியுள்ளது. எனவே உலகத்திலே உண்டாயிருக்கிற பலவிதமான அந்நிய போதனைகளைப் பின்பற்றா மல் ஆரோக்கியமான உபதேசத்தைப் பின்பற்றி அதனால் வரும் நன்மைகளை நாம் பெற்றுக்கொண்டு இவ்வுலகத்திலே தேவனுடைய கிருபையை பெறுவோமாக.

(தொடரும்)



முகாமில் ஆண்களுக்கான சிறப்பு வகுப்பின் போது...



முகாமில் வாலிபப் பெண்களுக்கான சிறப்பு வகுப்பின் போது...



முகாம் பாடல் குழுவினர்...




முகாமில் வாலிபர்களுக்கான சிறப்பு வகுப்பின் போது...



முகாமில் பெண்களுக்கான சிறப்பு வகுப்பின் போது...

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111



முகாமில் கலந்து கொண்ட தேவ ஊழியர்கள்...



சிறுவர், சிறுமியர்கள் பரிசு வசன அட்டைகளுடன்...




முகாமில் உணவு வேளையின் போது...

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.